### கோட்டை முதல் நீலாங்கரை வரை உள்ள 18 கி.மீ. தொலைவுக்கு

# சாலை நெடுக கடும் வெயிலில் கால்கடுக்க 800க்கும் மேற்பட்ட போலீஸ் பாதுகாப்பு!

சென்னை, மே 15-

கோட்டை முதல் நீலாங்கரை வரை, சாலை நெடுக நாள் ஒன்றுக்கு 3 முறை கால்கடுக்க கடும் வெயிலில் பெண் காவலர்கள் உள்பட 800 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

இதனால் ஏற்படும் பாதுகாப்பு கெடுபிடியால் அப்பகுதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, வேலைக்கு செல்வோர், பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தவெக தலைவர் விஜய் கடந்த 10ம் தேதி தமிழக முதல்வராக பதவியேற்றுக்கொண்டார். இதனால் புரோட்டாகால் அடிப்படையில் முதல்வர் வீடு மற்றும் தலைமை செயலகம், அவர் செல்லும் சாலைகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

முதல்வர் வீடு நீலாங்கரையில் உள்ள கேசினோ டிரைவ் பகுதியில் அமைந்துள்ளது. தினமும் முதல்வர் தலைமை செயலகத்தில் உள்ள அலுவலகத்திற்கு செல்கிறார். இதனால் காலை, மதியம், மற்றும் மாலை நேரங்களில் நீலாங்கரை முதல் கோட்டை வரை சாலை நெடுக ஆயுதப் படை பெண் காவலர்கள் மற்றும் காவலர்கள் என 800 பேர் 15 அடிக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர். தற்போது கத்திரி வெயில் என்பதால் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பெண் காவலர்கள் இயற்கை உடல் உபாதைகளுக்கு செல்லக்கூட முடியாமல் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள்.

பெண் காவலர்கள் இயற்கை உபாதைகள் கழிக்க ஒரு கிலோ 3 கிலோ மீட்டர் இடவெளியில் நடமாடும் கழிவறை வைத்துள்ளனர். ஆனால் பெண் காவலர்கள் அவசரத்திற்கு நடமாடும் கழிவறைக்கு கூட செல்ல முடியாத வகையில் உயர் அதிகாரிகள் பாதுகாப்பு கெடுபிடி கொடுத்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முதல்வராக ஜெயலலிதா இருந்த போது, அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததால் அவர் வீடு அமைந்துள்ள போயஸ் கார்டன் முதல் கோட்டை வரை பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதுவும், பொது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சிக்னல், சாலை வளைவுகளில் மட்டும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

கலைஞர் முதல்வராக இருந்த போது கூட கோட்டை முதல் கோபாலபுரம் வரை பெரிய அளவில் பாதுகாப்பு கெடுபிடிகள் இருந்தது இல்லை. ஆனால் முதல்வராக விஜய் பதவியேற்ற பிறகு, கலைஞர், ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை விட 3 மடங்கு பாதுகாப்பு தற்போது காவல்துறை சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரம் கலைஞர் மற்றும் ஜெயலலிதா, மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கோட்டையில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அவர்களது வீடுகள் இருந்ததால் முதல்வர் கான்வாய் புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு தான் பொது போக்குவரத்து நிறுத்தப்பட்டு வந்தது. கான்வாய் சென்ற அடுத்த நொடியே போலீசார் பொது போக்குவரத்தை திறந்துவிடுவார்கள். இதனால் பெரிய அளவில் முதல்வர்கள் செல்லும் பாதையில் போக்குவரத்து நெரிசல் இருந்தது இல்லை.

தற்போது முதல்வர் வீடு அமைந்துள்ள நீலாங்கரை முதல் கோட்டை வரை சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. ஒவ்வொரு நாளும் அதுவும் பீக் ஹவரில் முதல்வரின் கான்வாய் நீலாங்கரையில் இருந்து கோட்டைக்கு புறப்படுகிறது. வழக்கமாக நீலாங்கரையில் இருந்து கோட்டைக்கு வர 45 நிமிடங்கள் முதல் 1 மணி நேரம் 15 நிமிடங்கள் ஆகும். முதல்வர் கான்வாயால் நீலாங்கரையில் இருந்து கிழக்கு கடற்கரை சாலை, அடையார், காமராஜர் சாலை வழியாக கோட்டைக்கு வருகிறார். இதனால் காலையில் வேலைக்கு செல்வோர் முதல்வரின் கான்வாயால் ஒவ்வொரு சிக்னல்களிலும் 10 நிமிடங்கள் நிற்க வேண்டி உள்ளது.

இதனால் 3 மணி நேரத்திற்கு மேல் காலதாமதமாவதாக குற்றம்சாட்டி வருகின்றனர். இது ஒருபுறம் இருக்க, நீலாங்கரை முதல் கோட்டை வரை முதல்வர் கான்வாய் செல்லும் சாலைகளில் 300க்கும் மேற்பட்ட பெண் காவலர்கள் உட்பட 800க்கும் மேற்பட்ட ஆயுதப்படை போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

இதுதவிர போக்குவரத்து போலீசார் ஒவ்வொரு காவல் எல்லையில் அந்தந்த இன்ஸ்பெக்டர்கள் முதல் காவலர்கள் வரை தங்களது எல்லையில் கான்வாயில் யாரேனும் உள்ளே நுழைந்து விடக்கூடாது என்று கவனமாக கண்காணித்து வருகின்றனர்.

இதனால் போலீசாருக்கு முதல்வரின் கான்வாய் புறப்படுவதற்கு 1 மணி நேரத்திற்கு முன்பே அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதால், பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார் சரியான நேரத்தில் காலை உணவு, மதிய உணவு சாப்பிட முடியாமல் அவதிக்குள்ளாகின்றனர். முதல்வர் பாதுகாப்புக்காக ஆயுதப்படையில் பணியாற்றும் பெண் காவலர்கள் உட்பட 800க்கும் மேற்பட்ட காவலர்கள் கோட்டை முதல் நீலாங்கரை வரை கடுமையான வெயிலில் நின்று பாதுகாப்பு பணி மேற்கொள்ளும் நிகழ்வு வாகன ஓட்டிகளிடையே பேசு பொருளாக உருவாகியுள்ளது.

எனவே முதல்வரின் கான்வாய் செல்லும் சாலைகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பெண் காவலர்களின் சுமையை குறைக்க கான்வாய் புறப்படுதற்கு 10 நிமிடத்தில் அவர்களை சாலையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசாரின் வேண்டுகோளாக உள்ளது.

---

### கேரள முதலமைச்சர் தேர்வு:

# ராகுல் முயற்சி தோல்வி!

### வி.டி.சதீசன் முதல்வராக தேர்வானார்!

திருவனந்தபுரம், மே 15-

கேரளத்தின் முதலமைச்சராக வி.டி.சதீசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கே.சி.வேணுகோபாலை முதலமைச்சராக்கும் ராகுல் காந்தியின் முயற்சி தோல்வியடைந்தது.

கேரள சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்றால் ஒரு சில நாட்களிலேயே முதல்வரை தேர்வு செய்து விடுவோம் என்று தேர்தலுக்குமுன், காங்கிரஸ் தலைவர்கள் கூறினர். ஆனால், வெற்றிபெற்று 10 நாட்கள் கடந்த பின்னரும் முதல்வரை தேர்வு செய்ய முடியாத அளவுக்கு காங்கிரஸ் கட்சியில் சிக்கல் ஏற்பட்டது. முதல்வர் பதவிக்க வி.டி.சதீசனுக்கும், ரமேஷ் சென்னித்தலாவுக்கும், எம்.பி. கே.சி.வேணுகோபாலுக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டது. காங்கிரஸ் எம்.பி.யான கே.சி.வேணுகோபாலை முதலமைச்சராக்க ராகுல் காந்தி முயற்சித்தார். ஆனால், தேர்தலில் போட்டியிடாத கே.சி. வேணுகோபாலை முதலமைச்சராக்க முயற்சிப்பதற்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்நிலையில், எதிர்ப்புக்கு பணிந்த காங்கிரஸ் கட்சி, வி.டி.சதீசனை கேரள முதலமைச்சராக தேர்வு செய்து அறிவித்துள்ளது. இதனிடையே, கே.சி.வேணுகோபாலை, கேரள மாநில முதலமைச்சராக்கும் ராகுல் காந்தியின் முயற்சி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

---

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிபெண்களுக்கு வளைகாப்பு விழா!

### எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. பரிசு பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, மே15-

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர்நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் அவர்கள் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜுலை மாதம் முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

நாளை (16.05.2026 சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு, திருவண்ணா மலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ.பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் பிரியா ப. விஜயரங்கன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப் பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார். நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் இல.குணசேகரன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, ப.கார்த்திவேல் மாறன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

---

### சட்டப்பேரவையில்

# நெற்றிப்பொட்டில் நச்...சென தனது கருத்தை பதிவு செய்த உதயநிதி ஸ்டாலின்!

### ‘தினகரன்’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மே 15-

சட்டப்பேரவையில் கழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியது குறித்து ‘தினகரன்’ நாளேடு நெற்றிப் பொட்டில் நச்... என தனது கருத்தை பதிவு செய்துள்ளார் என தனது தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவரான உதயநிதி ஸ்டாலின் நிகழ்த்திய முதல் உரையானது அரசியல் களத்தில் மட்டு மல்லாது பொதுமக்களிடமும் வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 34.92 சதவீதம் மக்கள் மட்டுமே த.வெ.க.வை ஆதரித்துள்ளனர். மீதமுள்ள 65 சதவீத மக்கள் த.வெ.க.வை நிராகரித்துவிட்டனர். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அமைத்த கூட்டணி கட்சிகளின் ஆதரவில்தான் த.வெ.க. ஆட்சியமைத்து இருக்கிறது என நெற்றிப் பொட்டில் அடிப்பது போல அவரது பேச்சு அமைந்திருந்தது. அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்டு இருக்கிறது. அதில் ஒரு தரப்பு ஆதரவை சூட்சுமமாக பெற்றுள்ளீர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.


தினகரன்

மே 14, 2026 வியாழக்கிழமை

சிறப்பான முன்னெடுப்பு...!

தமிழக சட்டப்பேரவையில் எதிர்கட்சி தலைவரான உதயநிதி ஸ்டாலின் நேற்று நிகழ்த்திய முதல் உரையானது அரசியல் களத்தில் மட்டுமல்லாது பொதுமக்களிடமும் வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 34.92 சதவீதம் மக்கள் மட்டுமே தவெகவை ஆதரித்துள்ளனர். மீதமுள்ள 65 சதவீத மக்கள் தவெகவை நிராகரித்துவிட்டனர். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அமைத்த கூட்டணி கட்சிகளின் ஆதரவில்தான் தவெக ஆட்சியமைத்து இருக்கிறது என நெற்றிப்பொட்டில் அடிப்பது போல அவரது பேச்சு அமைந்திருந்தது. அதிமுக இரண்டாக பிளவுபட்டு இருக்கிறது. அதில் ஒரு தரப்பு ஆதரவை சூட்சமமாக பெற்றுள்ளீர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பிளவுப்பட்ட ஒரு கட்சியினர் வீட்டுக்கு புது சோபா ஒன்று போகிறது. சோபா பின்னால் புது முதல்வரும் வீட்டிற்கு செல்கிறார். புதுமையான ஆட்சி, புதுமையான ஆட்சி என்று சொன்னீர்கள். இன்றைக்கு புஷ்பா படம் பாணியில் ஆட்சி நடந்துக்கொண்டிருக்கிறது என பொரிந்து தள்ளினார்.

எல்லா கட்சி தலைவர்களையும் மரியாதை நிமித்தமாக சந்தித்த முதல்வர் விஜய், அ.தி.மு.க. பொதுச் செயலாளரான எடப்பாடி பழனிசாமியை சந்திக்காதது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் தனது கருத்தை வலுவாக பதிவு செய்துள்ளார்.

இந்த ஆட்சிக்கு நம்பிக்கை கொடுத்த எங்கள் தோழமை கட்சியின் நம்பிக்கையும் கொஞ்சம். கொஞ்சமாக சிதைத்து கொண்டிருக்கிறது எனவும் நச்...சென தனது கருத்தை பதிவுசெய்துள்ளார்.

தேர்தல் நேரத்தில், ஊழல் சக்தி.. ஊழல் சக்தி.. என்று சொன்னீர்கள். இன்றைக்கு சமூக வலைத்தளங்களில் மக்கள் உங்களை கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். கூவத் தூரையே மிஞ்சும் அளவிற்கு நீங்கள் கூத்தடிப்பதை பார்க்கும்போது, இந்த அரசு எத்தனை நாட்களுக்கு நீடிக்கப்போகுது என்று மக்களுக்கு சந்தேகம் வந்துவிட்டது என்றும் கடுமையாக சாடினார்.

எம்.எல்.ஏ.க்களை எல்லாம் கடன் பெற்று ஆட்சி நடத்துகின்ற முதல்வர், கடந்த தி.மு.க. ஆட்சியில், நாட்டின் வளர்ச்சிக்காக பெற்ற கடனை தவறாக எடுத்துரைத்து மக்களை திசை திருப்புகிறார். இந்த அரசு நல்லாட்சி தரும் என்று மக்களுக்கு துளியும் நம்பிக்கை இல்லை எனவும் காட்டமாக விமர்சித்தார். மேலும், இந்த ஆட்சி தொடர தடையாக இருக்க மாட்டோம். நம்பிக்கை வாக்கெடுப்பில் இருந்து விலகி, வெளிநடப்பு செய்கிறோம் எனக்கூறி கெத்தாக அவையை விட்டு, வெளியே சென்றார்.

இப்படி, அடிமேல் அடி கொடுத்து அசத்தலாக பேசிய உதயநிதி பேச்சை, அவை உறுப்பினர்கள் அனைவரும் மவுனமாக கேட்டுக்கொண்டே இருந்தனர். முதல்வர் விஜயும் மவுனமாக கேட்டுக் கொண்டிருந்தார். உதயநிதி பேச்சு, அரசியல் வட்டாரம் மட்டுமின்றி பொதுமக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றது.

அவரது பேச்சை வரவேற்று, நடிகர் சத்திய ராஜ் வெளியிட்ட வீடியோ, புதிய திருப்பமாக பார்க்கப்படுகிறது. ‘ஒரு அரசியல்வாதி கடைப் பிடிக்க வேண்டிய கடமை, கண்ணியம் மற்றும் கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். நீண்ட இடைவெளிக்கு பிறகு சட்டமன்றத்தில் இவ்வளவு தெளிவான மற்றும் நேரடியான பேச்சு கேட்கப் பட்டது’ என பாராட்டி உள்ளார்.

சட்டமன்றத்தில் ஆளும் கட்சி பலம் கொண்டவையாக இருந்தாலும், எதிர்கட்சிகள் முன்வைக்கும் மக்கள் பிரச்சினையை ஆராய்ந்து, நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இல்லையேல், மக்கள் மன்றத்தில் தோற்றுப்போக நேரிடும். அதைத்தான் உதயநிதி ஸ்டாலின் அழுத்தம், திருத்தமாக பதிவுசெய்தார்.

இவ்வாறு ‘தினகரன்’ எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பாராட்டியுள்ளது.

---

### புதுச்சேரி கல்வித்துறையின் சீர்கேடுகளை களைந்து

# மாணவர்களுக்கு தரமான கல்வியை உறுதி செய்திட வேண்டும்!

### முதல்வர் ரங்கசாமிக்கு மாநில தி.மு.க. வலியுறுத்தல் !

புதுச்சேரி, மே 15-

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் இரா. சிவா அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி மாநில முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் ந. ரங்கசாமி அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மாநில வளர்ச்சியில் எங்கள் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் ஆற்றல் மிகு எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மக்களின் குரலாக எதிரொலிப்பார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அனைவருக்குமான மருத்துவ காப்பீடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் அறிவித்த திட்டங்கள் உடனடியாக செயல்பாட்டுக்கு வர நடவடிக்கை எடுப்பதுடன், அனைத்து துறைகளிலும் தாங்கள் நேரடியாக கவனம் செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதுச்சேரி மக்கள் மட்டுமல்ல முதல்வர் அவர்களின் நீண்ட நாள் கனவாக உள்ள மாநில அந்தஸ்து பெறுவதற்கு இப்போதாவது ஆக்கப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் கல்வித்துறை மிகவும் பின்தங்கி உள்ளதை அரசின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு வந்திருந்தாலும், தற்போது வெளிவந்துள்ள சிபிஎஸ்இ தேர்வு முடிவுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளை அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் கல்வி தரம் எப்போதும் தேசிய அளவில் உற்று நோக்கப்படும் ஒன்றாக இருந்து வருகிறது. 2025-26 கல்வியாண்டிற்கான சிபிஎஸ்இ 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன. ஒட்டுமொத்தமாக 87.42% தேர்ச்சி என்பது ஒரு நல்ல தொடக்கமாகத் தெரிந்தாலும், புள்ளிவிவரங்களுக்குப் பின்னால் ஒளிந்துள்ள ஏற்றத்தாழ்வுகளும், அரசுப் பள்ளி மாணவர்களின் நிலையும் மிகுந்த வேதனையையும், உடனடி கவனத்தின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன.

இந்த ஆண்டு புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகிய நான்கு பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 9,152 மாணவர்கள் தேர்வு எழுதினர். இதில் 8,001 மாணவர்கள் (87.42%) தேர்ச்சி பெற்றுள்ளனர். மத்திய அரசுப் பள்ளிகள் (JNV/KV) 100% தேர்ச்சி பெற்று தங்களின் தரத்தை மீண்டும் நிலைநாட்டியுள்ளன. தனியார் பள்ளிகள் 94.15% தேர்ச்சி பெற்றுள்ளன. அரசுப் பள்ளிகள் 82.59% தேர்ச்சியுடன் பட்டியலில் கடைசி இடத்தைப் பிடித்துள்ளது கவலைக்குரிய விஷயம்.

தேர்வு முடிவுகளை



ஆய்வு செய்யும்போது சில கசப்பான உண்மைகள் வெளிப்படுகின்றன. மண்டல வாரியான ஏற்றத்தாழ்வுகள் உள்ளது. ஏனாம் பகுதி 100% தேர்ச்சி பெற்று முதலிடம் பிடித்துள்ளது. ஆனால், காரைக்கால் பகுதி 81.74% தேர்ச்சியுடன் மிகவும் பின்தங்கியுள்ளது. குறிப்பாக காரைக்கால் அரசுப் பள்ளிகளில் 78.55% மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். இது அந்தப் பகுதியில் உள்ள கல்வி உள்கட்டமைப்பில் உள்ள பெரும் ஓட்டையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தனியார் பள்ளிகளுக்கும் அரசுப் பள்ளிகளுக்கும் இடையே உள்ள சுமார் 12% தேர்ச்சி இடைவெளி, சாமானிய மக்களின் குழந்தைகள் பயிலும் அரசுப் பள்ளிகளில் இன்னும் கூடுதல் கவனம் தேவை என்பதை உணர்த்துகிறது.

மாநிலப் பாடத்திட்டத்திலிருந்து சிபிஎஸ்சி முறைக்கு மாறிய சூழலில், மாணவர்கள் வெறும் மனப்பாடம் செய்வதைத் தாண்டி, கருத்தியல் ரீதியாகப் புரிந்து கொள்வதில் (Conceptual Learning) இன்னும் பின்தங்கியுள்ளனரோ என்ற ஐயம் எழுகிறது. இந்தத் தேர்வு முடிவுகள் வெறும் எண்கள் அல்ல; ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலக் கனவுகள்.

12ஆம் வகுப்பு மதிப்பெண்களே உயர்கல்வி வாய்ப்புகளையும், வேலை வாய்ப்பையும் தீர்மானிக்கின்றன. குறைந்த தேர்ச்சி விகிதம் அல்லது குறைவான மதிப்பெண்கள் மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி, அவர்களைத் தவறான பாதையில் தள்ளக்கூடும். சிபிஎஸ்சி பாடத்திட்டத்தில் வலுவான கணிதம் அறிவியல் போன்ற முக்கிய பாடங்களில் அடித்தளம் இல்லையெனில், NEET, JEE போன்ற தேசிய நுழைவுத் தேர்வுகளில் நம் மாணவர்கள் மற்ற மாநிலங்களுடன் போட்டியிடுவது கடினமாகிவிடும்.

மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு புதுச்சேரி அரசு பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். தனிப்பயன் பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும். தேர்ச்சி விகிதம் 85%க்கும் குறைவாக உள்ள பள்ளிகளைத் தத்தெடுத்து, அங்குள்ள மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகள் மற்றும் வாராந்திர மாதிரித் தேர்வுகளை நடத்த வேண்டும்.

சிபிஎஸ்சி முறையில் மாணவர்களை எவ்வாறு தயார்படுத்த வேண்டும் என்பது குறித்து அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தேசிய அளவிலான வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்க வேண்டும். மிகவும் பின்தங்கியுள்ள காரைக்கால் பகுதிக்குத் தனியாகக் கல்வி நிதி ஒதுக்கி, அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிரப்ப வேண்டும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களுக்கு முறையான ஆலோசனைகளை வழங்கி, அவர்களைத் துணைத் தேர்வுக்கு (Supplementary Exam) உடனடியாக தயார்படுத்த வேண்டும். 100% தேர்ச்சி பெற்ற 7 அரசுப் பள்ளிகளின் கற்பித்தல் முறையை மற்ற பள்ளிகளிலும் அமல்படுத்த வேண்டும்.

கல்வி என்பது ஒரு சமூகத்தின் முதுகெலும்பு. புதுச்சேரி அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்களின் உயர்கல்வி கனவு சிதைந்துவிடக் கூடாது. 87% என்பது சாதனையல்ல, அது ஒரு எச்சரிக்கை மணி. அரசு, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே, வரும் ஆண்டுகளில் புதுச்சேரி 100% தேர்ச்சியையும், தரமான கல்வியையும் எட்ட முடியும்.

ஆகவே, புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள், புதுச்சேரி கல்வித்துறையின் சீர்கேடுகளை களைந்து, மாணவர்களுக்கு தரமான கல்வியை உறுதி செய்திட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

---

### தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவால் மூடப்படும்

# டாஸ்மாக் கடைகளில் பணிபுரிவோருக்கு மாற்று வேலை வழங்குக!

### தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் அறிக்கை!

சென்னை, மே 15-

தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவால் மூடப்படும் டாஸ்மாக் கடைகளில் அங்கு பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று தொ.மு.க. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிக்கை வாயிலாக புதிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் அவர்களின் அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் அமைந்துள்ள புதிய அரசின் உத்தரவின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து மற்றும் ரெயில் நிலையங்களுக்கு அருகில் 500 மீட்டர் தொலைவில் உள்ள மதுபான கடைகளை மூடிட முடிவு செய்துள்ளதாக அறிகிறோம்.

டாஸ்மாக் நிறுவனம் 2003 ஆம் ஆண்டு முதல் அரசின் பொதுத்துறை நிறுவனமாக இயங்கி வரும் நிலையில் சுமார் 24000



தொழிலாளர்கள் சுமார் 23 ஆண்டுகளாக உதவி விற்பனையாளர், விற்பனையாளர் மற்றும் மேற்பார்வையாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். அந்த தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் மூடப்படும் கடைகளில் பணிபுரிந்து வருபவர்களை அரசின் பிற துறைகளில் நிரந்தர வேலைவாய்ப்பும், கால முறை ஊதியமும் வழங்கிட வேண்டுமென தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### உத்தரப்பிரதேசத்தில் கனமழை :

# சூறைக்காற்றால் 5 மாவட்டங்களில் 86 பேர் உயிரிழப்பு!

லக்னோ, மே 15-

உத்தரப்பிரதேசத்தில் கனமழை மற்றும் சூறைக்காற்றால் 5 மாவட்டங்களில் 86 பேர் உயிரிழந்தனர்.

பிரயக்ராஜ், படோகி உள்பட 5 மாவட்டங்களில் பலத்த சூறைக்காற்றுடன் கனமழை பெய்தது.

ரவி தாஸ் நகர், பதேபூர், மிர்சாபூர் உள்ளிட்ட மாவட்டங் கள் மழையால் மோசமாக பாதிக்கப் பட்டுள்ளன.

கனமழைக்கு பிரயக்ராஜ் மாவட்டத்தில் அதிகபட்சமாக 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூறைக் காற்றால் மரங்கள் வேரோடு சாய்ந்ததாலும், வீடுகள், சுவர்கள் இடிந்து விழுந்ததாலும் உயிரிழப்புகள் அதிகமாக ஏற்பட்டுள்ளன.